**தூதரகத்தின் பிரதி முதல்வர் ரொபர்ட் பீ. ஹில்டனின் உரை**

**அமெரிக்க தூதரகம், கொழும்பு**

**இலங்கை அமெரிக்க மிஷனின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழா**

**தெல்லிப்பளை, இலங்கை, 2016, ஒக்ரோபர் 26 ஆம் திகதி.**

***தயாரித்ததன் பிரகாரம்:***

கலாநிதி ஜேம்ஸ் மூஸ் அவர்களே, சபையின் தலைவர் வணக்கத்திற்குரிய தேவசகாயம் தேவநேசன் அவர்களே, யாழ். மறைமாவட்டப் பேராயர் வணக்கத்திற்குரிய தந்தை கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களே, மதகுருமார்களின் உறுப்பினர் வணக்கத்திற்குரிய தந்தை ஜூட் சுதர்ஷன் அவர்களே, தேவாலயங்களின் மதத் தலைவர்களே, அரச பிரதிநிதிகளே, மக்களே மற்றும் நண்பர்களே!

இலங்கை அமெரிக்க மிஷனின் ஸ்தாபக தினத்தின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் இன்று உங்களுடன் இருப்பது எனக்குக் கிடைத்ததொரு பெரும் வாய்ப்பாக எண்ணி மகிழ்கின்றேன். இவ்வாறானதொரு சிறப்பான நிகழ்வை ஒழுங்கு செய்து நடாத்திய உங்கள் ஒவ்வொருவருக்கும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் திரு. அதுல் கேஷப் அவர்களின் சார்பிலும் இலங்கைக்கான அமெரிக்கா தூதரகத்தின் சார்பிலும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நிகழ்வானது பல்வேறு வழிகளில் ஒரு கொண்டாட்டம் ஆகும். முதலாவது மிஷனரிமார்களின் நம்பிக்கையையும், விடாமுயற்சியையும் கிறிஸ்தவர்களுக்கு நினைவூட்டும் நாளாக இந்நாள் அமைகின்றது. Mr. Newellஇன் இதழில் இருந்து மேற்கோள் ஒன்றினை நான் இங்கு எடுத்துக் கூற விரும்புகின்றேன். “முதல் ஐந்து கிறிஸ்தவ மிஷனரிகளில் ஒன்றாக விளங்கும் சிறப்புடைய, மிஷனரிமார்களின் உழைப்பிற்காக இங்கு பல துறைகள் உள்ளன… 120 மிஷனரிமார்களிற்கான பணிகள் இங்கே இருக்கின்றன, ஆயினும், தேவனின் வார்த்தைகளைக் கேளுங்கள் என்று எவரேனும் அவர்களுக்குக் கூறவில்லை.”

ஏனைய வேறு நாடுகளில் உள்ள அமெரிக்க அரசாங்கத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற எங்களுக்கு அமெரிக்காவிற்கும் இலங்கை உள்ளிட்ட ஏனைய பல நாடுகளுக்கும் இடையிலுள்ள உறவுநிலைகளின் பலம் வாய்ந்ததொரு அஸ்திவாரமாக மக்களை மக்களோடு இணைக்கும் ஒரு கொண்டாட்ட வைபவ நிகழ்வாக இந்நிகழ்வு அமைகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். கடந்த மாதம் காலியில் உள்ள கோட்டையில் அனைத்துத் தேவாலயப் புனிதர்களின் கல்லறைகள் உள்ள இடத்தில் திரு. ஜோன் பிளாக்கின் கல்லறைக்கு விஜயம் செய்வதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. திரு. ஜோன் பிளாக் முதலாவது அமெரிக்கத் தூதுவராகவும் இலங்கையில் பிரதான வர்த்தக முகவராகவும் இருந்தார். 1850இல் தனது பொறுப்புக்களை மேற்கொண்டார். அதற்கு 34

வருடங்களின் பின்னரான நிகழ்வினையே நாம் இன்று கொண்டாடுகின்றோம். என்னைப் போன்றவர்களுக்கு இது ஒரு பணிவான நினைவூட்டலாகவும் உள்ளது, துணிகரமான செயல் அல்லது தொழில் நாட்டத்தில் அறிவு அல்லது கடவுளின் பெயரில் நீண்டகாலமாக உறவு நிலைகளைக் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கின்ற மற்றும் உலகளாவிய ரீதியாகப் பயணம் செய்து கொண்டிருக்கின்ற தனிப்பட்ட அமெரிக்கர்களைக் காட்டிலும் உத்தியோகபூர்வமாகக் கொடியேந்திக் கொண்டு பணி செய்து கொண்டிருக்கும் நாட்டின் உத்தியோகபூர்வப் பிரதிநிதிகள் எங்களைக் காட்டிலும் மிகவும் முக்கியமானதாகும்.

கல்வி மற்றும் சுகாதாரப் பராமரிப்பு போன்றவற்றிற்குப் பங்களிப்புச் செய்யும் மிஷனரிமார்களிடமிருந்து நன்மையைப் பெறுகின்றவர்கள் என்ற வகையில் வடக்கு மக்களின் பலருக்கான ஒரு கொண்டாட்டமாகவும் கூட இது அமைகின்றது என நான் நம்புகின்றேன். நான் இந்நாட்டுப் பிரஜை அல்ல. பண்பாடும் சமயமும் ஒன்றையொன்று எதிர்கொள்ளும்போது முரண்பாட்டினையும் தவறான புரிந்துணர்வினையும் ஏற்படுத்தமுடியும் என்பதை நான் புரிந்து கொள்கின்றேன். இருப்பினும், இங்கு வருகை தந்த மிஷனரிமார்கள் பாட நூல்களை ஆங்கில மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தனர், தமிழ் மொழியில் முதலாவது பத்திரிகையை உருவாக்கினர், முதலாவது ஆங்கில – தமிழ்ப் பேரகராதி ஒன்றினை வெளியிட்டனர், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மற்றும் உடுவில் மகளிர் கல்லூரி, கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை ஆகிய நிறுவனங்களை நிறுவினர். நான் யாழ்ப்பாணத்திற்கு வந்தபோது இவ்விடங்களிற்கும் விஜயம் செய்தேன். இத்தகைய மரபுச் செய்றபாடுகள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றைச் சாதகமான ஒன்றாகவே நான் இங்கு கருதுகின்றேன்.

இறுதியாக, ஐக்கிய அமெரிக்காவின் ஒரு பிரதிநிதியாக நிற்கும் எனது நிலையில் இந்த ஆண்டு விழாவின் தனிப்பட்ட ஆர்வத்திற்கு நான் நன்றி கூறுகின்றேன். நாற்பது வருடங்களாக ஈரானில் சேவையாற்றிய கிறிஸ்தவ மிஷனரிமார்களான ஜோன் மற்றும் ருத் ஆகியோரின் பேரன் நான் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். எனது தாயாரும் அவரது ஐந்து சகோதரர்களும் ஈரானில் பிறந்தார்கள் அத்துடன் அவர்களால் இன்று பாரசீகத்தில் ‘‘ஆம், யேசு என்னை நேசிக்கின்றார்’’ என்று பாட முடியும். சாமுவேல் மற்றும் ஹரியெற் நிவெல், அட்னோரியம் மற்றும் ஆன் ஜூட்சன், சாமுவேல் மற்றும் றொக்ஷனானா நோட் ஆகிய எனது தாத்தா பாட்டிமார் அவர்களைக் காட்டிலும் சில சிறந்தவற்றில் அவர்கள் நம்பிக்கை வைத்திருந்ததன் காரணமாகத் தமது வாழ்க்கையின் சிறந்த பகுதியினை வழங்கியுள்ளார்கள். தமது பாவச் செயல்களுக்கு மன்னிப்புக் கோருகின்றபோது, தம்மைச் சுற்றியுள்ள மக்களுக்காக இவை போன்ற பெறுதற்கரிய பரிசில்களை வழங்கியுள்ள ஆண்களினதும் பெண்களினதும் திடமான நம்பிக்கையினையும் ஊக்கத்தினையும் நாம் அனைவராலும் இங்கு பாராட்ட முடியும் என நான் கருதுகின்றேன்.

நண்பர்களே, ஐக்கிய அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுநிலைகளிற்கான ஒரு புதிய எதிர்பார்ப்புள்ள நேரமாக இது விளங்குகின்றது. சாத்தியப்பாடான நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக ஒருங்கிணைவையும் ஒரு நிரந்தரமான வாழ்நாள்

சமாதானத்தையும் அடைந்து கொள்வதற்காக இந்நாட்டு அரசாங்கத்துடனும் மக்களுடனும் இணைந்து பணியாற்றுவதற்கு எமது தூதரகம் பொறுப்புடையதாக உள்ளது. இது மிகவும் கடுமையான பணிசார் குறிக்கோள் என்பது எமக்குத் தெரியும் ஆயினும், அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெர்ரி அவர்கள் கடந்த மே மாதம் கொழும்பில் பின்வருமாறு கூறினார். ‘‘யுத்தமின்மையைக் காட்டிலும் உண்மையான நிரந்தர சமாதானம் மேலானது. விசேஷமாக இன முரண்பாட்டிற்குப் பின்னர் உண்மையான நிரந்தர சமாதானம ஏற்பட நல்லிணக்கச் செயற்பாடுகள் உருவாகக் கூடிய கொள்கைகள் அவசியம். அவை மனவிரக்தியை ஏற்படுத்தக் கூடாது. தேசத்தின் அனைத்து பிரஜைகளும் சமமான கண்ணியத்துடனும், சமமான உரிமைகளுடனும் நடத்தப்பட வேண்டும் எனவும், எவரும் விலக்கப்பட்டவர்களாகவோ அல்லது அடிமைப்படுத்தப்பட்டவர்களாவோ இருக்கக் கூடாது எனவும் அது கோருகின்றது. தமது மக்களை பாதுகாப்பதற்கு உட்புறமாகவன்றி, வெளிப்புறமாக சக்தியை வெளிப்படுத்தும் இராணுவத்திடமும் அது அழைப்பு விடுக்கின்றது. அமெரிக்காவின் பிரபல ஜனாதிபதிகளில் ஒருவரான ஆபிரகாம் லிங்கன் அவர்கள், நாட்டின் ரணங்களைக் குரோதத்துடன் கட்டிக்காத்தல் என்பது எதனையும் நோக்கியதாக அமையாது எனவும், அனைத்தையும் நோக்கிய இரக்கத்துடன் கட்டுதலே சிறந்ததாகும்’’ என்றும் கூறினார்.

இந்தவகையில் இறுதியாக, இத்தகையதோர் ஆன்மீக நிகழ்வில் அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுநிலைகளின் உறுதிப்பாட்டின் உண்மையான ஆரம்பத்திற்கான பல்வேறு வழிகளை அடையாளப்படுத்துவதற்கு இங்கே என்னையும் இன்றைய நிகழ்வில் பங்குபற்றுவதற்கு அனுமதியளித்த இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர்களுக்கும் மற்றும் இந்நிகழ்விற்கு வருகை தந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் மீண்டும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி! வணக்கம்!.